1974 மார்ச் 15]

Supply of sooji.

* 445. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to make available good variety of sooji in the State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நல்லதரமான ரவை பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சார், சென்னையிலே மட்டும்தான் ஜனங்களுக்கு ரவை விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் இம்மாதிரி ஒரு விநியோக முறை இல்லை. எவ்வளவு ரவை நமக்குக் கிடைக்கிறது? ஏன் இதை மாவட்டங்களிலுள்ள சூப்பர் மார்க்கெட்டு களுக்கு விநியோகம் செய்யக்கூடாது? காரணம் என்னவென்றால் கிராமப்புறங்களில் கல்யாணம் போன்ற காரியங்களுக்கு ரவை முக்கியமாக இருக்கிறது. ஆனால் இப்பொழுது அங்கே கிடைப்பதில்லை. எனவே இதை எல்லா இடங்களுக்கும் கொடுக்க சர்க்கார் ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நான் இங்கே பலமுறை சொல்லியிருக்கிறேன். நமக்குக் கிட்டத்தட்ட 5,359 டன் இங்கே உற்பத்தி செய்யப்பட்டு வந்த அந்த ரவை இப்பொழுது 1,200 டன்னுக்கு வந்துவிட்டது. காரணம், 35,000 டன் கோதுமை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது 10,000 டன் என்று குறைந்துவிட்டதால் ரவை தயாரிப்பு குறைந்து இருப்பதால் எந்த அள விற்கு நாம் விநியோகம் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு இந்த நகரத்திலேயும் இன்னும் சில சூப்பர் மார்க்கெட்டுகளுக்கும் எப்படிக் கொடுக்க முடியுமோ அந்த முறையில் இருப்பதை நல்ல முறையில் விநியோகம் செய்யப்படுகிறது.

மண்ணெண்ணெய் பதுக்கல் வழக்குகள்.

*446 வினா:—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:

1973–74-ல், திருநெல்வேலி மாவட்டத்தில், மண்ணெண்ணெயை பதுக்கி வைத்ததாகவும், அதிக விலைக்கு விற்றதாகவும் பிராசிக்யூஷன் செய்யப்பட்ட வியாபாரிகள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 13—11—1973 வரை யில் 39 பேர்கள் மீது வழக்கு தொடர்வதற்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது.